International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 04 Issue: 04 October to December 2022 www.irjtsjournal.org

# ஈழத்து ஆலயங்களில் தேவரடியார்களின் பங்களிப்பு

முனைவர் (திருமதி) அ. கிருபைராஜா B.F.A(Hon), M.A, M.phil,Ph.D
*முதுநிலைவிரிவுரையாளர் நடனத்துறை,யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*
இலங்கை

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டைத் தமிழகத்தில் இருந்த ஆலயங்களில் ஆடல்மகளிர் அமர்த்தப்பட்டு அவர்கள் ஊடாக ஆடற்கலை மேற்கொள்ளப்பட்டுவந்தது. குறிப்பாகபல்லவர் காலத்தில் தோன்றியபக்தி இயக்கம் ஆலய வழிபாடுகளிலும் விழாக்களிலும் ஆடற்கலை ஓர் அம்சமாகபுகுத்தப்பட்டதன் விளைவாக ஆலயங்கள் தோறும் ஆடல் மகளிரின் தேவைஉணரப்பட்டது. இதனால் ஆலயங்கள் தோறும் தேவதாசிப் பெண்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஊடாக ஆடற்கலையானது வளர்க்கப்பட்டுவந்தது. இதற்காகமன்னர்கள் தங்களாலான முயற்சிகளையும் அவர்களிற்கான கொடைகளையும் வழங்கிவந்தனர். இத்தகைய பின்னணியிலேயே ஈழத்து ஆலயங்களிலும் ஆடல் கலைப்பணிக்காக நோக்கமாகக் கொண்டு தேவரடியார்கள் அமர்த்தப்பட்டிருந்தனர்.*

*பரதநாட்டியவளர்ச்சியில் ஆடல் மகளிரின் பங்குமுக்கியமான இடத்தினைவகிக்கின்றது. தேவரடியார் என்னும் பதம் தேவனுக்கு - இறைவனுக்கு தெய்வத் தொண்டு செய்யும் பெண் எனப் பொருள்படும். இவர்கள் பரதநாட்டியகலையைபயின்று முற்காலத்தில் கோவில்களில் பிற இடங்களிலும் ஆடினார்கள். இசை, நடன, அழகியல், சமய, சமூகவியல் மரபேதேவதாசிகள் முக்கியமான ஓரிடத்தினைவகித்துள்ளனர்.*

*ஈழமெனப்படும் இலங்கையுடன் இந்திய நாடு பல துறைகளிலும் தொன்று தொட்டுத் தொடர்புடையதாக இருந்துவந்துள்ளது. அதில் நடனக்கலை ஒரு அங்கமாககுறிப்பிடலாம். ஆதிகாலத்தில் இருந்து ஈழத்து ஆலயங்களிலும் தேவரடியார்களின் ஆடற்கலைபணிநடை பெற்றது என்பதற்கு பல ஆவணங்கள், சான்றுபகர்கின்றன. இவ் ஆதாரங்களில் இருந்து ஈழத்து ஆலயங்களில் தேவரடியார்களின் பங்களிப்பினை இனங்காண்பதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்*

*ஈழத்தில் பரதநாட்டியம் அறிமுகம் மாவதற்கு ஈழத்து ஆலயங்களில் ஆடல் பணியாற்றிய தேவரடியார்களே காரணமாக இருந்துள்ளார்கள் என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும். இவ்வாய்வானது வரலாற்று ஆய்வு முறையை பின்பற்றி உள்ளது. ஈழத்தில் சோழர் மன்னர்களது ஆட்சியிலிருந்து பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஈழத்து ஆலயங்களில் தேவரடியார்களின் பங்களிப்பே ஆய்வின் எல்லையாக எடுத்து கொள்ளப்படுகின்றது. ஆய்வு மூலங்களாக, மகாவம்சம், சூழவம்சம், தச்சனகைலாயபுராணம், யாழ்ப்பாணவைபபமாலை, கனகிபுராணம் போன்ற நூல்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றது இவ்வாய்வின் பயன்பாடாக ஆரம்பகாலத்தில் ஈழத்துஆலயங்களின் தேவரடியார்களின் கலைப்பணி முக்கியத்துவம் வாய்ந்தது தொன்றாககாணப்பட்டு உள்ளது என்பதையாவரும் தெரிந்து கொள்வதற்கு இவ்வய்வு பயனுடையதாக அமையும்.*

**முக்கியவார்த்தைகள்** : *ஈழத்து ஆலயம், தேவரடியார்*

**முன்னுரை**

சோழர் காலத்து பொலன்னறுவ, தேவிநுவர போன்ற இடங்களில் காணப்பட்டசைவவைணவ ஆலயங்களில் நடனமாதர்கள் இசை, நடன பணிபுரிந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகவும் கந்தளாயில் இருந்தவைத்தீஸ்வரர் என்னும் சிவாலயத்தில் ஏழு தேவரடியார்களது இசை நடனப்பணி இடம் பெற்றதாகவும் ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்(சிவசாமி 1998.பக் 27) கி.பி 14ம் நூற்றாண்டளவில் இலங்கைக்கு வந்த மொறொக்கோநாட்டு பயணியாகிய இவின்பட்டுடாதன்னுடையபிரயாண குறிப்புக்களில் தேவிநுவரையில் வைணவமத ஆலயம் ஒன்று இருந்ததாகவும், அதில் ஆலய கிரியைகளின் போது இறைவன் திருவுருவத்திற்கு முன்னதாக நடனமாதர்கள் தமது ஆடலை அர்ப்பணம் செய்ததாகவும் ஏறத்தாழ 500 நடனமாதர்கள் வரையில்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*

இங்கு இருந்ததாகவும் குறிப்பிடுகின்றமையை ஆய்வாளர்கள் இலங்கையின் நாட்டியக்கலைவளர்ச்சி தொடர்பாக ஆதாரப்படுத்தியுள்ளனர்.

தேவரடியார்களது நடனப்பணி தமிழ் நாட்டில் எவ்வளவு ஆழமாக முக்கியப் படுத்தப்பட்டதோ அதே வேகத்துடன் இலங்கையிலும் இவர்களது பணியைமேற்கொள்வதற்குரிய முயற்சிகள் அக்கால மன்னர்களால் மேற்கொள்ளப் பட்டிருந்தன. அந்தவகையில் பாடல் பெற்றதலங்களாகியதிருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகியவற்றிலும் நடனமாதர்கள் பணியாற்றிமைக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன.

"பரந்தவாய் இணைதண்ணுமை பற்பல
நிரந்ததள்ளர் நெருக்க முழுங்கலால்
அரந்தைபோய் அது இன்றாமென் ஆர்த்துஅவர்
புரந்தமங்கையர் அரங்குஎதிர் கோயினார் " (த.பு.)

கவிவீரராகவர் என்பவர் யாழ்ப்பாணத்து மன்னர்களோடு தொடர்பு கொண்டவர். இவர் யாழ்ப்பாண மன்னர்களில் குறிப்பாக பரராசசேகரனின் அரண்மனைக்குச் சென்று அவனைப் பாராட்டிக் கவிபாடினார் என்பதனை மேலுள்ள தக்ஷணகைலாசபுராணத்திற்குரியசிறப்புப் பாயிரப் பகுதி மூலம் தெளிவாக அறிய முடிகின்றது.

தமிழ் மன்னர்களை தொடர்ந்து ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களின் போதும் தொடர்ந்து வந்த அரசுகள் ஓரளவிற்கேனும் இக்கலை வடிவங்களை ஆலயங்களில் நிலவச் செய்வதற்கு பங்காற்றி இருக்கின்றனர். அந்தவகையில் பொலன்னறுவையை ஆண்ட முதலாம் பராக்கிரபாகுமன்னன் ''சரஸ்வதி'' மண்டபம் என்னும் கட்டிடத்தை நிறுவி அங்கு நடனக் கலைக்கான சேவைகளை செய்திருக்கிறான் என்று அறியமுடிகிறது. அவனது பட்டத்தரசியாகலீலாவதி நடனத்தில் தேர்ச்சி பெற்றிருந்தமை இம் முயற்சிக்குரியகாரணியாகவும் இருந்திருக்கலாம். எனக் கூறப்படுகின்றது.

துட்டகை முனுகாலத்தில் 10ம் நூற்றாண்டின் இறுதிதொடங்கி 13ம் நூற்றாண்டுவரையுள்ளகாலப் பகுதியேபொலனறுவைகாலமாகும் இக்காலத்தில் இந்துக்களின் ஆதிக்கம் அதிகமாக காணப்பட்டது. இதன் பொருட்டு இந்துமதக் கோவில்களில் தேவதாசிகளின் நடனம் கூடுதலாக பிரசித்தி பெற்றுக் காணப்பட்டது. இக்காலத்தைப் பற்றி நோக்குகையில் பராக்கிரம பாகுமன்னரையேகுறிப்பிடலாம். சிவன் காவியங்கள், பாடல்கள், நடனங்கள், போன்றவற்றை கற்றதாகவும் ஆடல் பாடல்களில் சிறந்தவர்களை கிராமங்களுக்கு அனுப்பிநாட்டியம் மற்றும் இசைகச்சேரிகள் அமைத்து உளவு பார்க்கவைத்ததாகவும் அரச குடும்பத்தவர்களின் பிள்ளைகளுக்கு நாட்டியம் பயில்வித்ததாகவும் கூறப்படுகின்றது. (கிருஷ்ணராஜா 1999, பக். 23)

கி.பி 11ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் பொலன்னறுவ, யாப்பகூவா, கம்பளை, டெடிகம போன்ற அரசாங்கத்தின் கோட்டைகளில் நிலவிய நடன வகையினை பரதநாட்டியத்தின் முன்னோடிகளாக குறிப்பிடுகின்ற தன்மையினையும் ஆய்வாளர்கள் இலங்கையின் நடனக்கலை வரலாறு தொடர்பில் ஆதாரப்படுத்துகின்றனர். சோழமன்னரை தொடர்ந்து இலங்கையை ஆட்சி செய்தமுதலாம் விஜயபாகு, முதலாம் பராக்கிரமபாகு போன்ற மன்னர்கள் இசைநடனக் கலைகளை ஆதரித்தது தெரியவருகிறது. (குணராஜா 2003, பக். 128)

தொடர்ந்து வந்த பாண்டிய பேரரசும், விஜயநகர பேரரசும் இக்காலவடிவங்களை மேலும் வலுப்படுத்தி இருந்தன. இதன் பின்னராக ஏற்பட்ட ஐரோப்பியரது ஆட்சியும் சுதேசகலைகளைநலிவுறச் செய்தன. ஆயினும் வளர்ச்சியில் ஏற்பட்ட பல்வேறு சிக்கல்களை எதிர் கொண்டு இலங்கையில் நாட்டியக்கலை மீண்டும் துளிர்விடத் தொடங்கியது. சோழமன்னரது ஆட்சிக் காலத்தில் அவர்களின் தலைநகராக விளங்கிய பொலனறுவையில் அமைக்கப்பட்ட பிரபல்யமானவானவன் மாதேவிஈஸ்வரத்தில் ஆடல் மகளிர் பலர் இறைபணியின் பொருட்டு ஆடற்பணி புரிந்ததாகவும் அவர்கள் தினந்தோறும் ஆடற்பணிதவிர்ந்த பல வேலைகளை மேற்கொண்டதாகவும்

அவற்றில் ‘’நந்தாவிளக்கு’’ ஏற்றுவதும் ஓர் செயன்முறையாக இடம் பெற்றதாக இக்கோவிலுள்ளகல்வெட்டு கூறுகின்றது. (பத்மநாதன் 2013, பக். 98)

பொலநறுவை, தேவிநுவர போன்ற இடங்களிலிருந்தசைவ, வைஷ்ணவைக் கோவில்களில் தேவரடியார்கள் இருந்து இசை, நடனப் பணிகள் புரிந்தமைக்கான சான்றுகள் உள்ளன. கந்தளபயிலிருந்த விஜயராஜஈஸ்வரம் எனும் சிவாலயத்திலே ஏழு தேவரடியார் இருந்த இசை, நடனப் பணிபுரிந்தனர் என அறியப்படுகிறது. கி.பி 1344 இல் இலங்கைக்கு வந்த மொறேக்கோ நாட்டுப் பயணியான இபின்பட்டுட்டாவின் பிரயாணக் குறிப்புக்கள் மூலம் தேவிநுவரயில் இருந்த பெரியவிஷ்ணு ஆலயத்திலே இறைவன் திருமுன் குறிப்பிட்டுகிரியைகளின் போது ஆடுவதற்கும் பாடுவதற்குமாக 500 மாதர் (தேவரடியார்) இருந்தனர் எனஅறியப்படுகிறது. (நிக்லஸ் 1966, பக். 13)

யாழ்ப்பாணத்திலிருந்த சில பெரிய கோவில்களிலாவது தேவரடியார் இருந்துசமயப் பணிகளும் கலைப்பணிகளும் செய்திருப்பர் எனலாம். யாழ்ப்பாண அரசை வென்றுதத்தம் ஆதிக்கத்தை ஏற்படுத்திய போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சிக் காலங்களிலே ஏற்கனவே குறிப்பிட்டவாறு நடனக்கலை ஆதரவின்றிமங்கிற்று. தொடர்ந்து ஏற்பட்ட பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலே மீண்டும் தலைகாட்டிற்று. இக்காலத்திலேசமகாலத் தமிழகத்திலே போன்று தேவதாசிகள் இங்கும் ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்ந்தனர். இதனால் ஆறுமுக நாவலர் போன்றோர் இவர்களைக் கண்டித்துள்ளனர். எனினும், ஆகமமுறைப்படி அமைக்கப்பட்ட கோவில்களிலே இசை போன்று நடனமும் ஒழுக்க முள்ளகலைஞர்களாலே நடத்தப்படுதலை நாவலர் பெருமான் விரும்பிலர் எனக் கூறமுடியாது.

எனினும் சிலதேவதாசிகள் தமிழ்நாட்டிலிருந்து இங்குவந்து சென்றனர். இவர்கள் பெரும்பாலும் ஒப்பந்த அடிப்படையிலே சிலவணிகர் முதலியோரால் கொண்டுவரப்பட்டனர். வேறுசிலர் இங்கு தொடர்ந்துவாழ்ந்தனர். வண்ணார் பண்ணை, இணுவில், நல்லூர், மாவிட்டபுரம், அளவெட்டி போன்ற இடங்களில் அவரக்ள் வசித்துவந்தனர்.

தேவதாசிநடனம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில், நல்லூர் கந்தசுவாமி கோவில் போன்றவற்றிலே திருவிழாக் காலங்களில் மட்டுமன்றி நாள் தோறும் இடம் பெற்ற இவர்களின் நடனங்களுக்கு பெருந்தொகையான மக்கள் சென்றனர். கோவில் தேர்த்திருவிழாவின் போது அழகிய நடன மாதர் பல ஆபரணங்கள் அணிந்துதேரின் முன் ஆடியமைபற்றிமறன் வின்ஸ்லோ (1835) குறிப்பிட்டுள்ளார். ஆறுமுகநாவலர் எழுதியநல்லூர் கந்தசுவாமிகோவில் பற்றியகட்டுரையில் சாயங்காலபூசைக்கும் இரண்டாம் காலபூசைக்கும் இடையேவசந்தமண்டபத்தின் எதிரே இவர்களின் நடன சங்கீதங்கள் நிகழ்வது பற்றியகுறிப்பு உள்ளது (நவரெட்ணம், ஈழகேசரி 1954, பக்.4)

19ம் நூற்றாண்டு யாழ்ப்பாணத்திலே கனகி எனும் தேவசாசி வண்ணைவைத்தீஸ்வரன் கோவிலில் நர்த்தகியாகவிளங்கினார்,

“சித்திரமறையோர் வீதிசிறந்திடும் வண்ணையூர்க்குக்
கத்தனாம் வைத்தீசர்க்குக் கனத்ததோர் நடனஞ் செய்யும்’(க.பு.130)…

என்ற பாடலில் உள்ள இரண்டாவது வரியில் “வைத்தீசர்க்குகனத்ததோர் நடனஞ் செய்யும்” என்னும் வரிகளின் மூலமாககனகிஎன்பவள் வண்ணார்பண்ணைவைதீஸ்வரன் ஆலயத்தில் ஆடற்கலைநிகழ்த்தும் ஓர் நங்கையாக குறிப்பிடுகிறார். நல்லூரில் பன்றிக்குட்டி, ஆதிலஷ்மி என அழைக்கப்பட்ட நடனமாதுவாழ்ந்ததாக அறியப்படுகின்றது இவர்களைப் போலவேறுசிலர் நல்லூர், வண்ணார்பண்ணை, இணுவில், மாவிட்டபுரம், அளவெட்டி முதலிய இடங்களில் வாழ்ந்தனர்.

தமிழகத்திலுள்ள கண்ணமங்கையைச் சேர்ந்தமாது ஸ்ரீகமலாம்பிகை, கைதடியைச் சேர்ந்ததிருவேலப்ப முதலியாரின் வேண்டுகோளுக்கு இணங்க அங்குள்ள பிள்ளையார் ஆலயத்திலே சில காலமாககலைச் சேவை


© 2022, IRJTSR

செய்து பிரபலமடைந்தார். அதே காலப்பகுதியிலே கொழும்பில் நடைபெற்றதிருப் பொன்னம்பல முதலியாரின் திருமணவைபவத்திலே நன்கு ஆடிப் பாராட்டும் பெற்றார், பின்னர் பிள்ளைகளுடன் சொந்த ஊரான தமிழகத்திற்கு சென்று தம் முடையபிள்ளைகளுக்கு இசை, நடனம் முதலியகலைகளை நன்கு கற்கவாய்ப்பளித்தார். பின்னர் கைதடிதிரும்பினார்.

கொழும்பிலேதிரு. பொன்னம்பல முதலியார் தாம் அமைத்தசிவாலயம் (பொன்னம்பலவாணேஸ்வரம்) மகாகும்பாவிஷெகத்தின் போது நடனமாடுவதற்கு கமலாம்பிகையும் அவரதுகுழுவினரையும் வரவழைத்தார் இவ்வைபவம் முடிந்த பின் இவ் ஆலயத்திலே கணிகையாக விளங்குமாறு பொன்னம்பலமுதலியார் கமலாம் பிகைக்கு வேண்டுகோள் விடுத்தார், அவரும் அதை ஏற்றுக் கொண்டு பணி புரிந்தார். அவருடைய மூத்தமகள் சந்தானவல்லிக்குத் திருப்பொட்டுக்கட்டப்பட்டு அவளும் கோவில் நர்த்தகியானார்.

சந்தானவல்லியின் மகள் நீலாயதஷிக்கும் பத்துவயதிலே பொன்னம்பல வாணசுவாமிக்கு அடிமையாக பொட்டுக் கட்டப்பட்டது. பொன்னம்பல முதலியாருக்கு பின் அவரின் மக்கள் திரு. பொன். குமாரசுவாமியும் சேர். பொன். இராமநாதனும் தர்மகர்த்தாக்களாக மேற்குறிப்பிட்ட நர்த்தகிகளுக்கு உதவி செய்து இக்கோவில் கலைப்பணிகளிலும் ஈடுபட்டுவந்தனர். அஞ்சுகம் என்பவள் தாயாரின் வேண்டு கோளின் படிதேவதாசிகளின் வரலாறு பற்றி உருத்திரகணிகையர் கதாசாரத்திரட்டு எனும் நூலைஎழுதி கொழும்பிலே வெளியிட்டார். இந்நூலாசிரியரின் குடும்ப வரலாறு வேறு பல பிரபல்யமான தேவதாசிகள் வரலாறு இதிலே கூறப்பட்டுள்ளது. (பாஸ்கரதாஸ் 2012, பக். 30)

**முடிவுரை**

பன்னெடுங்காலமாககலைகள் சமயத்துடன் இணைந்து வளர்ந்து வந்துள்ளன குறிப்பாக இந்து சமயநிழலிலே கலைகள் மிக நேர்த்தியாக வளர்ச்சி அடைந்துள்ளன ஆலயங்களிற்கும் கலைகளுக்கும் இடையேபிரிக்கமுடியாத ஒன்றிணைந்த தொடர்பு நிலவிவந்துள்ளது இறைவனைவழிபடும் நிலையினைக் கொண்ட வழி பாட்டு முறைகள் வைதீகமரபுகளை ஓட்டியவையாயினும் அவற்றில் ஏதோவகையில் கலைகள் இடம் பெறுதல் தெளிவு என்பதை ஈழத்து ஆலயங்களின் தேவரடியார்களின் பங்களிப்பை கொண்டு அறியக் கூடியதாக உள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

[1] கிருஸ்ணராசா.செ., இலங்கைவரலாறு,பகுதிIபிறைநிலாவெளியீடு, இலங்கை 1999.

[2] குணராஜா.கா.,மகாவம்சம் தரும் இலங்கைசரித்திரம்,கமலம் பதிப்பகம். இலங்கை2003.,

[3] நிக்கலலஸ்.டீ.நு., இலங்கைச் சரித்திரம்,ஆசிரிவாதம் அச்சகம், இலங்கை 1966.

[4] பாஸ்கரதாஸ்.ஆ., இலங்கைதிருநாட்டின் இந்துக்கோயில்கள், இந்தசமயதிணைக்களம், இலங்கை 2012.

[5] புஷ்பரட்ணம். ப. பேராசிரியர்,ஈழத்தமிழர் மரபுரிமைஅடையாளங்கள்,தமிழ்க்கல்விச்சேவைசுவிற்சர்லாந்து, 2017

[6] பத்மநாதன்.சி.,பொலனறுவைசைவ வைஸ்ணவதிருக்கோயில்களின் சிற்பங்களும் படிமங்களும், மகாஜனாக் கல்லூரி, இலங்கை 2013.

[7] குணராஜா.கா., சூளவம்சம் கூறும் இலங்கைவரலாறு,யுனிஆட்ஸ் லிமிற்ரட்இலங்கை 2008.

[8] நவரத்தினம்.க., இலங்கைகலைவளர்ச்சி,ஈழகேசரி, இலங்கை 1954.

[9] சிங்கைசெகராஜசேகரம்,தட்சிலகையாலபுராணம்,பகுதிII இந்துசமயஅலுவலகர் திணைக்களம், இலங்கை 1995.

[10] அருட்பிரகாசம், (1921)வையாபாடல்,இலங்கை

[11] சபாநாதன், (1951)யாழ்ப்பாணவைபவமாலை, இலங்கை

[12] நட்டுவச்சுப்பையனார்,கனகிபுராணம்,சுதந்திரன் அச்சகம், இலங்கை 1962.